# கழகத்தின் கொடிகாத்த குமரனாக என்றும் நினைவில் வாழும் என்.வி.என். சோமு!



திராவிட முன்னேற்றக் கழகம் சந்தித்த மிகப்பெரிய வரலாற்றுக் கொள்கைப் போர்க்களங்களில் கருப்பு சிவப்பு கழகக் கொடியை நெஞ்சுரத்தோடு தாங்கிப்பிடித்து களமாடிய போராளி என்றால் அது மிகையாகாது. இலட்சோபலட்சம் போராளிகளின் வழித்துணையாக முன்னின்ற தலைவர்களில் உடன்பிறப்புகளின் உடன்பிறப்பாய் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களது வழியில் பீடு நடை போட்டவர் எங்கள் நினைவில் வாழும் ஆளுமை திரு. என்.வி.என். சோமு அவர்கள்!

அவர் என் தந்தை மட்டுமல்ல, குடும்பத்தலைவராக தனது கடமைகளை நிறைவேற்றிவந்த உறவு மட்டுமல்ல, சமூகநீதி எனும் இலட்சிய விருட்சத்தின் விதையை விதைத்து, தி.மு.கழகத்தின் வழியில் எந்நாளும் களமாடிடும் கொள்கைத் திசைமானியாக விளங்கியவர். அறவாழ்வின் அடித்தளமாக விளங்கி வருபவர். எனது தாத்தா திரு. என்.வி. நடராசன் அவர்களது தீரத்தோடு பிறந்தவர் – என்றும் மாறா பற்றுறுதியோடு வாழ்ந்தவர். செங்குன்றம் அருகிலுள்ள ஞாயிறு என்ற சிறிய ஊரில் 1937இல் பிறந்தவர். உதயசூரியனின் வழியில் செல்வோம் என்பதை அவர் பிறந்த ஊரே கட்டியம் கூறியதுதான் வரலாறு.

எனது தாத்தா திரு.என்.வி.நடராசன் அவர்களது கொள்கை மகனாக தனது வாழ்வை கழகத்துக்கும், கொள்கைப் பயணத்திற்கும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் காட்டிய திசையில் திட்டங்களை வகுத்தளிப்பதற்கும் தன்னை அர்ப்பணித்துக்கொண்ட உயிராய், உறவாய் உதிரத்தில் கலந்த உடன்பிறப்பு காலம் சென்ற எனது தந்தையார் திரு. என்.வி.என்.சோமு. அவர்கள். இதன் வெளிப்பாடு தான் "அவர் எனக்கு விசுவாசமாக இருப்பது மாத்திரமல்ல, இந்தக் கட்சிக்கு விசுவாசமானவர், கொள்கைக்கு விசுவாசமானவர் என்பது முத்தமிழறிஞர் கலைஞர் அளித்த நற்சான்று. அந்த நற்சான்றை நானும் மருத்துவ அணி செயலாளராக என்னை அவர் நியமித்தபோது பெற்றேன் என்பது எனக்கு கிடைத்த மாபெரும் பேறு.

எனது தந்தை சட்டப்படிப்பு பயின்ற பிறகு இந்தியன் வங்கியில் வேலை வாய்ப்பு கிடைத்ததும், பேரறிஞர் அண்ணாவிடம் தனது வாழ்வின் வழித்தடத்தை மாற்றப்போகும் முடிவெடுக்க யோசனை கேட்கிறார். பேரறிஞர் அண்ணா அவர்கள் "கட்சியில் சட்டப் பணிகள் ஏராளம் இருக்கின்றன. உன்னைப் போன்றோர்தான் கழகத்தின் வழக்குகள், சட்டப் பணிகளைக் கவனிக்க வேண்டும்" என எனது தந்தைக்கு ஊக்கமளித்து கழகத்தின் முதல் சட்டக்குழுவில் இணைத்துக்கொண்டார். அரசியல் சூழலில் வளர்ந்திருந்தாலும் கழக மாணவர் அணியிலும் இணைந்து களமடியிருந்தாலும் தனக்கான இடத்தை, தனது உழைப்பால், அதன் வழி வந்த வாய்ப்பால் உருவாக்கி திடப்படுத்தியவர் எனது தந்தையார் என்பதில் எங்களுக்கு பெருமையே! இன்றளவும் தொடர்ந்து மக்களின் உரிமைக்காக நீதிமன்றத்தில் களமாடி வென்றெடுத்துவரும் எதிரிகளின் சிம்மசொப்பனம் திமுகழக சட்டத்துறை முதன்முதலாக உருவாக்கப்பட்டபோது, அதன் இணைச் செயலாளராக எனது தந்தையார் இருந்ததும் பாரம்பரியமாக கிடைத்த உழைப்புக்கான வாய்ப்பே!

1938 – 39 வரையிலான காலகட்டத்தில் நடைபெற்ற இந்தி எதிர்ப்பு போராட்டத்தின்போது ஒன்றரை வயது பாலகனாக தனது தாயோடு சிறை சென்றவர். 1968 ஆம் ஆண்டு, சென்னை பெத்தநாயக்கன்பேட்டை மாநகராட்சி மன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 1973ஆம் ஆண்டு வரை மக்கள் சேவையில் இருந்தார். 1971–72ஆம் ஆண்டு, சென்னை மாநகராட்சியின் துணை மேயராகவும் பொறுப்பேற்றிருந்தார். 1980 ஆம் ஆண்டு, பூங்கா நகர் தொகுதியிலிருந்து சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1984ஆம் ஆண்டு சட்டமன்றத்துக்கும், நாடாளுமன்றத்துக்கும் ஒரே நேரத்தில் பொதுத் தேர்தல் நடத்தப்பட்டது. அந்தத் தேர்தலில் வடசென்னை நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிட்ட எனது தந்தையார் திரு.என்.வி.என்.சோமு அவர்கள் தி.மு.கழகத்தின் சார்பில் வெற்றி பெற்றார். 1991ம் ஆண்டில் மத்திய சென்னை நாடாளுமன்ற தொகுதி வேட்பாளராக எனது தந்தையார் திரு. என்.வி.என் .சோமு அவர்கள் போட்டியிட்டபோது, அதே மத்திய சென்னை நாடாளுமன்ற தொகுதிக்கு உட்பட்ட ஆயிரம் விளக்கு தொகுதியில் தளபதியார் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் போட்டியிட்டார். கருப்பு சிவப்பு கொள்கைப்படையை வழிநடத்திக்கொண்டிருந்த நமது தளபதியார் அவர்களுடன் இணைந்து அயராது பணியாற்றிவந்தார்.

1996ஆம் ஆண்டு, கழகத்தின் அமைப்பு செயலாளராக கழகப் பணியாற்றிய காலத்தில் வட சென்னை நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிட்டு, இரண்டாம் முறையாக வெற்றிபெற்று வந்தவருக்கு, ஒன்றிய அமைச்சராகும் வாய்ப்பினை நல்கினார் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். அப்போது, கழகத்தின் ஆதரவுடன் அமைந்திருந்த தேவகவுடா அமைச்சரவையிலும், அதன்பின்னர் ஐ.கே.குஜ்ரால் அமைச்சரவையிலும் பாதுகாப்புத் துறை இணை – அமைச்சராக பொறுப்பில் இருந்தார்.

எளிய பாட்டாளி மக்களின் ஆதரவோடு மக்கள் பிரதிநிதியாக உருவெடுத்திருக்கிறோம் என்ற எண்ணம் என்றும் அவரது மனதில் நீங்கியதேயில்லை!

"அதிகாரத்தின் உயரத்தைவிட பணிவின் ஆழத்தையே பெரிதாகக் கருதியவர் என்றும், "என் அன்பு தம்பி, அறிவும் ஆற்றலும் பெற்றவன் என்றும் வாஞ்சையோடு முத்தமிழறி ஞர் கலைஞர் அழைத்தற்கும் காரணம் இதுவே! 1993 ஆம் ஆண்டில் கழகம் உள்கட்சி நெருக்கடியை சந்தித்தபோது, கழகத்தின் கொடி தொடர்பான வழக்கு தலைமை தேர்தல் ஆணையம் வரை சென்றது.



**மரு.கனிமொழி என்.வி.என்.சோமு**
*மாநிலங்களவை உறுப்பினர், தலைவர் தி.மு.க. மருத்துவ அணி செய்தி தொடர்பாளர் தி.மு.க.*

கொடியை மீட்பதற்குச் சென்ற வழக்கறிஞர் அணியில் களமாடிய எனது தந்தையார் திரு. என்.வி.என். சோமு அவர்கள் இன்றைய அடிமைகள் போல அடையாளத்திற்கு அடிபணியாமல், உறுதியோடு வாதாடி வெற்றியை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் கரங்களில் கொண்டுசேர்த்தார். `கழகத்துக்கும், கலைஞருக்கும் எந்தக் காலத்திலும் துரோகம் செய்யக் கூடாது' என்று எனது தாத்தா பெற்ற சத்தியத்தை மீறாது அதை உறுதியாகப் பற்றி நின்றது மட்டுமல்லாமல், கழகத்துக்கும் கலைஞருக்கும் அரணாக திகழ்ந்தவர் எனது தந்தையார். இதை இயன்றபோதெல்லாம் அங்கீகரித்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். பாரம்பரியமாக ஒரு அரசியல் விடியலின் மீது நம்பிக்கை கொண்டு, எளிய மக்களுக்காக சமரசமில்லாது போராடிவரும் உடன்பிறப்புகளுக்கு மட்டுமே இந்த உணர்வுகள் புரியும்! இன்றைய விட்டில் பூச்சிகள் அறியாது சிறைக்கம்பிகள் தாங்கிநிற்கும் உதிரத்தின் பேரலையை!

1997ஆம் ஆண்டில் நவம்பர் 14 அன்று, அருணாசலப் பிரதேசத்தில் ஹெலிகாப்டர் விபத்தில் எனது தந்தை காலமான செய்தியை அறிந்த கணத்தில் ``அடக்கமே உருவான என் அன்பு, ஆருயிர் தம்பியை, அறிவும் ஆற்றலும் பெற்ற தம்பியைப் பறிகொடுத்து, நெஞ்சுடைத்துப் பதறும் என்னை யார் தான் தேற்றிட இயலும். இந்த கொடுமைகளையெல்லாம் காணவும் கேட்கவும்தான் நான் இன்னமும் இருக்கிறேனா என கலைஞர் வடித்த கண்ணீர், கழகத்தின் அத்தனை உடன்பிறப்புகளுக்கும் ஆறாத வடுவை ஏற்படுத்தியது.

`பத்தரை மாற்று தங்கக் கட்டி பறிபோய் விட்டது' என கடிதம் எழுதிய கலைஞர், அவர் விட்டுச் சென்றுள்ள பணிகளை அண்ணா வழியிலே அயராதுழைத்து நிறைவேற்றிட உறுதி பூணுவோம் என உடன்பிறப்புகளுக்கு உணர்வூட்டினார்.

அந்த உணர்வை எங்கள் சாசனமாகக் கொண்டு நானும், எனது குடும்பத்தினரும் என்றும் மாறாத பற்றுறுதி கொண்டு கழகத்தின் நிழலில் மக்களின் உரிமைக்காக களமாடுவோம்! கழக மருத்துவ அணியில், மாநிலங்களவையில் நான் செயலாற்றும் ஒவ்வொரு மணித்துளியும் மனித சமத்துவத்திற்கு போராடிய இந்த வரலாறு என்னுள் எதிரொலித்துக்கொண்டே இருக்கும்!!


நமது கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்ர திராவிட நாயகர் அண்ணன் மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று இந்தியாவிற்கே முன்னோடியாக சமூகநீதியை நிலைநிறுத்தி NEET முதல் SIR வரை மக்கள் உரிமைக்காக முழங்கிவருகிறார். விடியல் பயண திட்டம், மகளிர் உரிமைத் தொகை திட்டம், நான் முதல்வன் திட்டம் போன்ற மகத்தான மக்கள் நலத் திட்டங்களை கொண்டு வந்து இருண்டு கிடந்த தமிழ்நாட்டில் புதியதோர் விடியலை வகுத்தளித்து வருகிறார்.

கோபாலபுரம் திமுக முதல் கழகத் தலைவர் வரை இன்றளவும் அயராது உழைக்கும் அவரது ஆற்றலே எங்கள் நெஞ்சங்களில் இலட்சியத்தீயை வளர்த்து வருகிறது. கழக இளைஞரணி செயலாளர் தமிழ்நாடு துணை முதலமைச்சர் இளந்தலைவர் அவர்கள் அன்று கோபாலபுரம் திமுகவை தளபதியார் அவர்கள் உருவாக்கியபோது எத்தகையதோர் வளர்ச்சியை கனவு கண்டாரோ அதை இன்றைய இளைய தலைமுறையிற்கு எடுத்துச் சென்று தொடர்ந்து விதைத்து வருகிறார். அன்று பேரறிஞர் அண்ணா அவர்கள் தம்பி என்று உரிமையோடு அழைத்து நம்மை அரசியல் மயப்படுத்தினார். இன்று உடன்பிறப்பே வா என்ற முன்னெடுப்பின் வழியே இளைய தலைமுறையுள் சமூகநீதியை விதைத்து வருகிறார் இளந்தலைவர் கழக இளைஞரணி செயலாளர் அவர்கள்.

நூற்றாண்டு கொண்டாடி இந்திய சுதந்திரத்திற்கே நாங்கள் தான் பாடுபட்டோம் என்று சிலர் வீண் விளம்பரங்கள் செய்துவருகிறார்கள். ஆனால் இங்கே அறிவுத்திருவிழா நடத்தி சுயமரியாதைக் கொள்கைகள் நமது வளர்ச்சிக்கு எந்த வகையில் அடித்தளமிட்டு இருக்கின்றன என்று உணர்த்தியிருக்கிறார் கழக இளைஞரணி செயலாளர் தமிழ்நாடு துணை முதலமைச்சர் இளந்தலைவர் அவர்கள். இவையெல்லாம் என் தந்தையர் இருந்து கண்டிருந்தால் அவரின் மனம் பூரிப்படைந்திருக்கும்!

டபுள் எஞ்சின் சர்க்காரை விஞ்சி ஒரு ட்ரில்லியன் டாலர் வளர்ச்சியை நோக்கி தமிழ்நாட்டை முன்னேற்றி வருகிறார் திராவிட நாயகர் தளபதியார் அவர்கள்! இவற்றிற்கு அடித்தளமிட்டது நமது தி.மு.கழகத்தின் கொள்கை பற்றுறுதியே! மகத்தான வளர்ச்சியை தமிழ்நாட்டிற்கு வகுத்தளித்து, மக்களுள் நம்பிக்கையை இன்று தி.மு.கழகம் விதைக்கிறது என்றால் நமது கொள்கை முன்னோடிகள் கண்ட போராட்டங்களும் அது கற்றுத்தந்த பாடங்களுமே என்றால் அது மிகையல்ல!

என்றும் எங்கள் நினைவில் நமது கொள்கைத் தலைவர்களின் முழக்கம் எதிரொலிக்கும்! உடன்பிறப்புகளின் செயல் தீரத்தில் செயலில் பகுத்தறிவின் விதைகள் தேசமெங்கும் விதைக்கப்படும்! நூறாண்டு கண்ட சுயமரியாதை இயக்கத்தின் வழியில் பவள விழா கண்டுள்ள திமுகழகத்தின் கொள்கை உறுதியோடு, நமது கழக உடன்பிறப்புகளின் மாறா பிணைப்போடு சமூகநீதியை மக்களுள் விதைப்போம்!



விழுப்புரம் மாவட்டத்தைச் சேர்ந்த மாணவர் பவன்குமார் தனி நபர் பிரிவில் ஜூனியர் தேசிய சாம்பியன்ஷிப் போட்டியில் தங்கம் வென்றதையொட்டி கழக துணை பொதுச் செயலாளர் – முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி எம்.எல்.ஏ.வை நேரில் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

### தமிழ் வளர்ச்சித் துறை வாயிலாக

# முதலமைச்சர் கணினித் தமிழ் விருது!

## டிச.31–க்குள் விண்ணப்பிக்கலாம்!

சென்னை, நவ.14–

பன்னூறு ஆண்டுகளாக வற்றாத படைப்புக்களைக் கொண்டு, சீரிளமை யோடு இயங்கி வரும் தமிழுக்கும், தமிழ்மொழி, பண்பாட்டு வளர்ச்சிக்குத் தொண்டாற்றிடும் தமிழ்த்தாயின் திருத்தொண்டர்களுக்கு தமிழ்நாடு அரசு பல்வேறு விருதுகளையும் சிறப்புகளையும் அளித்து, அவர்தம் தொண்டுக்கும் தமிழுக்கும் பெருமை சேர்த்து வருகின்றது.

தகவல் தொழில் நுட்ப வளர்ச்சிக்கேற்ப, உலகமெலாம் கணினி வழித் தமிழ் மொழி பரவச் செய்யும் வகையில் கணினித் தமிழ் வளர்ச்சிக்காக சிறந்த தமிழ் மென்பொருள் உருவாக்குபவர்களை ஊக்குவிக்கும் வகையில் தமிழ் வளர்ச்சித் துறை வாயிலாக முதலமைச்சர் கணினித் தமிழ் விருது என்ற பெயரில் 2013ஆம் ஆண்டுமுதல் வழங்கப்பட்டு வருகிறது. தற்போது இவ்விருது பெறுபவருக்கு விருதுத் தொகையாக ரூபாய் 2 இலட்சம், ஒரு சவரன் தங்கப்பதக்கம் மற்றும் தகுதியுரை வழங்கப்படுகிறது.

2025ஆம் ஆண்டுக்குரிய முதலமைச்சர் கணினித் தமிழ் விருதுக்கு தனியர் மற்றும் நிறுவனத்திடமிருந்து, தமிழ் வளர்ச்சிக்கான மென்பொருள்கள் / செயலிகள் வரவேற்கப்படுகின்றன. விருதுக்கு அனுப்பப்படவுள்ள மென்பொருள்கள் போட்டிக்குரிய ஆண்டிற்கு முந்தைய மூன்றாண்டுக்குள் தயாரிக்கப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

இவ்விருதுக்குரிய விண்ணப்பம் மற்றும் விதிமுறைகளைத் தமிழ் வளர்ச்சித் துறையின் வலைத்தளத்தில் (www.tamilvalar chithurai.tn.gov.in) இலவசமாகப் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

நிறைவு செய்யப்பட்ட விண்ணப்பங் களை தமிழ் வளர்ச்சி இயக்குநர், தமிழ் வளர்ச்சி இயக்ககம், தமிழ்ச்சாலை, எழும்பூர், சென்னை – 600 008 என்ற முகவரிக்கு அஞ்சல் வாயிலாக 31.12.2025 ஆம் நாளுக்குள் உரிய ஆவணங்களோடு விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டும்.

கூடுதல் விவரமறிய விரும்புவோர் 044 – 28190412, 044 – 28190413 ஆகிய தொலைபேசி எண்களை அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளலாம். உரிய நாளுக்குள் (31.12.2025) பெறப்படும் விண்ணப்பங்களே ஏற்றுக் கொள்ளப்படும் என்பதை நினைவிற் கொள்ள கனிவுடன் வேண்டுகின்றோம்.

இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



புதுச்சேரி மாநிலம், வில்லியனூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட வில்லியனூர் திருக்காமீஸ்வரர், தில்லை நகர் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதியில் வசிக்கும் மக்கள் பயன்பெறும் வகையில் திருக்காமீஸ்வரர் நகருக்கு அருகில் உள்ள முருகன் நகரில் புதிய அங்கன்வாடி மையம் மற்றும் ரேஷன் கடை கட்டுவதற்கு ரூ. 48.50 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வில்லியனூர் கொம்யூன் பஞ்சாயத்து மூலம் மேற்கொள்ளப்படும் பணிக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்ச்சி நடந்தது. இதில், தொகுதி சட்டமன்ற உறுப்பினரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சிவா கலந்துகொண்டு, புதிய அங்கன்வாடி மையம் மற்றும் ரேஷன் கடை கட்டுமானப் பணியை தொடங்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில், கழக நிர்வாகிகள் பலரும் பங்கேற்றனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### அ.அ. ஜின்னா
### நவம்பர் 14 (2022)



**பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் உற்ற நண்பராக, சிறந்த வழக்கறிஞராக விளங்கியவர்.**

**சென்னை சட்டக் கல்லூரி தமிழ் மன்றத் துணைத் தலைவராக இருந்தபோது, எதிரெதிர் துருவங்களான பேரறிஞர் அண்ணாவையும், மூதறிஞர் இராஜாஜியையும் ஒரே மேடையில் அமர வைத்து இந்தி திணிப்பிற்கு எதிராக பேச வைத்தவர்.**

**கழகத் தலைவர் அவர்கள் , மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்ட போது, அவருடன் கைது செய்யப்பட்டு ஓராண்டு சிறைவாசம் அனுபவித்தவர்.**

**கழக மாநிலங்களவை உறுப்பினராக பணியாற்றி, கழகத்தின் குரலை நாடாளுமன்றத்தில் ஒலித்தவர்.**

**தமிழ்நாட்டிலேயே முதன்முதலாக பேரறிஞர் அண்ணாவின் திருவுருவச் சிலை வடித்து, அதனை சென்னை சட்டக் கல்லூரி வளாகத்தில் நிறுவியவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### 2025 – 2026 ஆம் கல்வியாண்டிற்கான

# தொல் குடியினர் புத்தாய்வுத் திட்டம்!

## விண்ணப்பங்களை வரவேற்க புதிய இணையதளம் உருவாக்கம்!

சென்னை, நவ.14-

இளங்கலை / முதுகலை / முனைவர் பட்டம் / முனைவர் பட்ட மேலாய்வாளர் போன்ற வல்லுநர்களின் திறமைகளைப் பயன்படுத்தும் வகையில் தமிழ்நாடு அரசு "தொல்குடியினர் புத்தாய்வுத்திட்டம்" என்ற திட்டத்தினை 2024-2025 ஆம் கல்வியாண்டில் அறிமுகப் படுத்தியுள்ளது. இத்திட்டத்தின் கீழ் தகுதி பெற மாணாக்கர்களின் குடும்ப ஆண்டு வருமான வரம்பு ரூ.8.00 இலட்சத்திற்குள் இருத்தல் வேண்டும் மற்றும்மாணாக்கர் தமிழ்நாட்டில் உள்ள பழங்குடியினர் தொடர்பான ஆராய்ச்சி மற்றும்ஆய்வு மேற்கொள்ள வேண்டும். இத்திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்படும்.

இளங்கலை மற்றும் முதுகலை மாணாக்கருக்கு மாதம் ரூ.10,000 வீதம் (6 மாதத்திற்கும்) முனைவர் பட்டம் / முனைவர் பட்ட மேலாய்வாளர்களுக்கு மாதம்ரூ.25,000 வீதம் (3 வருடத்திற்கும்) உதவித் தொகையாக வழங்கப்படும்.

2025-2026 ஆம் கல்வியாண்டில் இத்திட்டத்தின் கீழ் விண்ணப்பங்கள் வரவேற்க புதிய இணையதளம் "fellowship.tntwd.org.in" உருவாக்கப்பட்டுள்ளது.

மேலும் இத்திட்டத்திற்கான நெறிமுறைகளை இவ்விணைய தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். 2025 - 2026 ஆம் கல்வியாண்டிற்கு தொல்குடியினர் புத்தாய்வுத் திட்டத்தின் கீழ் விண்ணப்பங்கள் 12.11.2025 நாளிலிருந்து 12.12.2025 நாள்வரை இணையதளம் மூலம் வரவேற்கப்படுகின்றன. மாணாக்கர்கள் மேற்காணும் திட்டத்தினை தவறாது பயன்படுத்திக் கொள்ளுமாறு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையால் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

# டெல்லி கார் வெடிப்பு!

## சி.சி.டி.வி. காட்சி வெளியீடு!

*டெல்லி, நவ. 14 -*

*டெல்லி கார் குண்டு வெடிப்பு விவகாரத்தில் காவல்துறை விசாரணையை தீவிரப் படுத்தியுள்ளது. கார் வெடிப்பு சம்பவத்தை அரங்கேற்றியது உமர் உன் நபிதான் என்று காவல்துறை உறுதிப்படுத்தியுள்ளது. காரை ஓட்டி வந்ததும், அதில் குண்டு வெடிக்க செய்ததும் உமர் உன் நபி என்பது விசாரணையில் தெரியவந்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. உமர் காரை ஓட்டி வருவதும், பின்னர் காரில் இருந்து இறங்கி சாலையில் நடந்து செல்வதும் சி.சி.டி.வி. கேமராவில் பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*பல கார்களில் வெடி குண்டுகளை நிரப்பி பல்வேறு இடங்களுக்கு எடுத்து சென்று வெடிக்க செய்ய திட்டமிட்டதும் தெரியவந்துள்ளதாக டெல்லி காவல்துறை தெரிவித்துள்ளது.*

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பாபு ஜனார்த்தனன்
### நவம்பர் 14 (1989)



**பள்ளிப் பருவத்திலேயே திராவிடர் கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்றினார். பின்னர் தி.மு.க. ஆரம்பித்தவுடன் கழகத்தில் இணைந்து பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோருடன் நெருக்கமாக பழகும் வாய்ப்பினை பெற்றவர்.**

**1978ஆம் ஆண்டு முதல் 1983ஆம் ஆண்டு வரை ஒன்றுபட்ட வடஆற்காடு மாவட்ட தி.மு.க. செயலாளராக பணியாற்றியவர்.**

**1980ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் செய்யாறு தொகுதியில் போட்டியிட்டு பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றவர்.**

**கழகம் அறிவித்த அனைத்து அறப்போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**